# சிவதீக்கை

- உயிருக்கு பாசத்தைக் கொடுத்து ஞானத்தை (அ) மெய்யுணர்வை ஏற்றுக்கொண்டு நன்மை பயப்பது - தீட்சை எனப்படும்,
- முதல்வனது சந்நிதியில் தீக்கை எனப்படுவது - தொழிற்பாடுஆகும்,
- முதல்வன் செய்யும் ஐந்தொழில்களுள் அருளல் எனப்பொருள்படுவது - தீக்கை.
- சைவத்திருமுறைகளை ஓதுவதற்கும் , சைவநெறியை ஒழுகுவதற்கும் தகுதியை உண்டு பண்ணுவது - சிவதீக்சை (அ) சிவதீக்கை எனப்படும்.
- முதல்வனால் தரப்படும் தீக்சையின் வகைகள் 2, அவை
    1). நிராதாரம்,
    2). சாதாரம்
- முதல்வன் தானே செய்யும் அருள்செயல் - நிராதார தீக்சை.
- அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோருக்கு அளித்தது - நிராதார தீக்சை.
- விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் இறைவன் அளித்த தீக்சை - நிராதார தீக்சை.
- சகலருக்கு முதல்வன் அளிக்கும் தீக்சை - சாதார தீக்சை.
- மாணிக்கவசகருக்கு அளிக்கப்பட்ட தீக்சை வகை - சாதார தீக்சை.
- சாதார தீக்சை பொதுவாக தீக்சை என அழைக்கப்படுகிறது. தீக்சையின் வகைகள் 3 அவை
    1). சமயதீக்கை
    2). விசேடதீக்கை
    3). நிர்வாணத்தீக்கை.

- சரியை தொடங்கும் முன் செய்யப்படுவது - சமயதீக்கை.
- கிரியை செய்யும் முன் செய்யப்படுவது - விசேசதீக்கை.
- யோகம், ஞானம் தொடங்கும் முன் செய்யப்படுவது - நிர்வாணதீக்கை,
- தீக்சை செய்யும் முறைகள் 7 வகைப்படும். அவை
    1. ஸ்பரிசதீக்சை
    2. நயனதீக்சை(திருநோக்கு)
    3. மானததீக்சை(பாவரன)
    4. வாசகதீக்சை(உரை)
    5. மந்திரதீக்சை(சாத்திரம்)
    6. யோகதீக்சை
    7. ஔத்திரிதீக்சை
- கோழி தன் முட்டையை அடைகாத்து குஞ்சை வெளவரச் செய்வது போல் குரு தன் கரத்தால் சீடனை தொட்டு சீடனுக்கு கர்மபாசம் நீங்கச் செய்து பக்குவப்படுத்துவது - ஸ்பரிசதீக்கை.
- மீன் தன் சினையிலிருந்து குஞ்சை வெளிவரச் செய்வதுபோல ஆசிரியன் தன் அருள்நோக்கால் பாச பந்தத்திலிருந்து மாணக்கனை விடுவித்தல் - நயனதீக்சை(திருநோக்கு).
- ஆமை தன் முட்டையை மனத்தால் நினைத்து கொண்டிருப்பது போல குரு தன் மாணவனது மனதை தன்வயப்படுத்தி அவனது கர்மத்தின் வலிமையை குறைய வைத்தல் - மானத தீக்சை(பாவனை).
- குரு உபதேசித்து மாணவன் தெளிதல் - வாசகதீக்சை(உரை).
- காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே என்று மருதவாணரின் உபதேசத்தால் துறவு பூண்டவர். இது வாசகதீட்சைக்கு எ.கா, ஆகும்.

- ”செத்தத்தின் வயிற்றல் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்” என்று மதுரகவியாழ்வார் கேட்டதற்கு ”அத்தைத் தின்று அங்கே கிடக்கும்” என்று உரைத்தவர் - நம்மாழ்வார். இதுவும் வாசகதீக்சைக்கு எ,கா ஆகும்.
- குருவானவர் மந்திரத்தை உபதேசித்து அதை சீடர்கள் உச்சரிப்பதன் மூலம் அவர்களது மலங்களை அழியச்செய்வது - மந்திர தீக்சை.
- யோகம் என்பது - சேர்க்கை என பொருள்படும்,
- குரு மாணாக்கனை இறைவனோடு ஒன்ற வைப்பது - யோக தீக்சை.
- ஹோமா அக்னி மூலம் சீடனின் மலங்களை நீக்கச் செய்வது - ஔத்திரி தீக்கை,
- ஔத்திரி தீக்கை செய்யும் முறைகள் - 2வகை அவை
    1) கிரியாவிதி
    2) ஞானவழி.
- குண்டமண்டலங்களை ஹோமத்தோடு செய்வது - ஞான வழி.
- குண்டமண்டலங்கள் இன்றி ஹோமத்தை மனத்தால் செய்வது - ஞானவழி.
- ஔத்திரி தீக்கையின் வகைகள் - 3 அவை சமயதீக்கை, விசேடதீக்கை, நிருவாண தீக்கை.
- ஔத்திரியின் வகை மூன்றும் தனித்தனியே நர்பீசம், சபீசம் என இருவகைப்படும்,
- உபதேசிக்கும் மந்திரங்களை பீச அக்கரங்களன்றி உணர்த்துவது - நிர்ப்பீசம், அதாவது இது சமய ஆசாரங்களை ஓம்ப ஒழுக முடியாதவர்களுக்கு செய்யப்படுவது.
- நிர்பீசத்தின் வேறுபெயர் - நிரதிகாரை.
- மந்திரங்களை பீசங்களுடன் உணர்த்துவது - சபீசம்,

- **சபீசத்தின் வேறுபெயர் - சாதிகாரை,**
- **வேள்விச்சாலை அமைத்து, தீயுருவாய் விளங்கும் இறைவனை மாணாக்கன் வழிபடும்படி செய்து ஹோமத்தால் தூய்மைப்படுத்துவது - சமயதீக்கை.**
- **சமயதீக்கையின வேறுபெயர் - மந்திராதிகாரை.**
- **சமயதீக்கை பெற்ற மாணாக்கனை சிவபுத்திரன் ஆகசெய்வது - விசேடதீக்கை.**
- **விசேடதீக்கையின் வேறுபெயாக்ள் - அர்ச்சனாதிகாரை, யோகாதிகாரை.**
- **மாணாக்கனின் சஞ்சித கன்மத்தை வலுவிழக்கச் செய்து முல மலத்தின் வலியை நீக்கி, முப்பொருள் பற்றிய மெய்யுணர்வை பொதுவகையால் விளங்கச்செய்வது - நிர்வாண தீக்கை.**
- **நிர்வாண தீக்கை பெற்றோர் மேற்கொள்ளும் நெறி - ஞானநெறி.**

**------****-----****----**